# *சங்க இலக்கியத்தில் தமிழர் வாணிகம்*

***பேரா க.வீரராகவன்.***
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, எஸ்.ஏ கலை மற்றும் அறிவியல் கல்லூரி திருவேற்காடு சென்னை - 77. தமிழ்நாடு இந்தியா.*
*மின்னஞ்சல் முகவரி ragavan.ragav3@gmail.com.*
ORCID ID : https://orcid.org/0000-0002-3393-9036

*DOI:- 10.5281/Arimaa.15130888*

***ஆய்வுச் சுருக்கம் :***
*தமிழர் வாழ்வும் வரலாறும் இன்றளவும் உலகில் சிறப்புடன் பேசப்பட்டு வருகின்றது, இதற்கு அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையும் அவ்வாழ்க்கை முறைக்கு ஏற்ற அறக்கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு கடைப்பிடித்தது வாழ்ந்ததுமே காரணமாக அமைகின்றது. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்றொரு வாழ்க்கை நெறியை பிற்கால சந்ததியினருக்கு வகுத்தும் கொடுத்தனர். இல்லற வாழ்வில் குடும்பத்திற்கு தேவையான பொருளீட்டுவதற்காக வாழ்வின் ஒரு பகுதியை செலவழித்தனர். வாணிகம் என்பதும் பொருளீட்ட வேண்டும் என்ற வணிக நோக்கத்திற்காக மட்டுமின்றி ஒரு அற நெறியை கடைப்பிடித்து தாமும் இன்பமோடு வாழ வேண்டும் தங்கள் பொருட்களை வாங்கக்கூடிய மக்களும் இன்பமோடு இருக்க வேண்டும் என்ற என்ற உயர்ந்த நோக்கத்தை கொண்டிருந்தனர். இதனை இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ள செய்வதோடு அக்கோட்பாடுகளை கடைப்பிடிப்பதற்கு வழிகாட்டுவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.*

***முன்னுரை :***
*ஒரு மனிதனின் வாழ்க்கையை உயர்த்துவதற்குரிய கருவிகளில் ஒன்று பொருள். இத்தகைய பொருளை ஈட்டுவதற்காக மனிதன் தன்னுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை செலவிட வேண்டி உள்ளது. பொருள் ஈட்டும்போது கூட பணத்தை அதிகமாக பெற்றுக் கொண்டு பொருளை குறைவாக கொடுப்பதும், பொருளுக்கு நிகரான விலையை நிர்ணயம் செய்யாமல் அதிக விலைக்கு விற்பனை செய்வதும் என்றில்லாமல் அறநெறியை கடைப்பிடிக்க வேண்டும் என்பது தமிழரின் குணமாகவும், உயர்ந்த நோக்கமாகவும் இருந்துள்ளது. மனிதன் என்பவன் பெரும்பாலும் சுயநல நோக்கம் கொண்டவனாக இருக்கின்ற போது சங்க கால தமிழர்கள் பொதுநல சிந்தனையோடு வாழ்ந்திருக்கின்றனர் என்பது உவகை. அனைத்து வளங்களையும் கொண்டுள்ள சமுதாயத்தின் அடையாளங்களில் ஒன்று வாணிகம். தமிழ் சமுதாயத்தின் தொழில்களில் உழவுத்தொழிலும் வாணிகமும் தலை சிறந்தது. இவை இரண்டும் ஒரு சமுதாய மேம்பாட்டிற்கு இன்றியமையாத கூறுகளாக விளங்கியது. சங்க காலத்தில் தமிழர் சமுதாயம் இவற்றை குறைவில்லாமல் பெற்றிருந்தது. உழவினாலும் வணிகத்தினாலும் முன்னேற்றமடைந்த தமிழர் சமுதாயம் நாகரீகத்திலும் பொருளாதாரத்திலும் முன்னேறியது என்பதை சங்க பாடல்கள் உணர்த்துகின்றன.*

***வணிகம் சொல் விளக்கம் :***
*வணிகம் என்ற சொல் வணியம் என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பெறப்பட்டவை ஆகும். இது வலி அல்லது பணி என்ற சொல்லிருந்து பிறந்தது. ஏனெனில் பணியர் என்பவர் வேதகாலத்து ஆசிரியர், வணிகரைக் குறிக்கும் சொல் ஆகும். இந்த பணியரை தஸ்யூக்கள் என்று அழைப்பர் என்கிறார் கோவிந்தன். தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்ககத்தின்* ***6ஆம் வகுப்பு தமிழ் பாடப்புத்தகத்தில் பருவம் 2, இயல் 3: "வளரும் வணிகம்"*** *என்ற உரைநடையில் இடம்பெற்றுள்ளது.*

*வாணிகம் என்பது பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட இலக்கியச் சொல். வணிகம் என்பது அதற்கு மாற்றாக தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற வழக்குச் சொல். வணிகத்திற்கு இலக்கணம் கூறும் வள்ளுவர் பிறர் பொருளையும் தம் பொருள் போன்று ஒரே தன்மையாக கருத வேண்டுமென்று குறிப்பிடுகின்றார் என்பதைக் காண்கின்ற பொழுது வணிகத்திற்கு தேவை மிகவும் நடுநிலையோடு இருக்கும் பண்பு என்பதை*

***'வாணிகம் செய்வோர்க்கு வாணிகம் பேணிப்***
***பிறவும் தமபோல் செயின் " (குறள் - 120)***

*என்ற குறளின் வழி உணர்ந்து கொள்ளலாம்.*

***வாணிகரின் குணநலன் :***

*சங்க காலத்தில் தமிழர்கள் வணிகத்தை சுயநலம் கருதாது சமுதாய நலம் கருதியே செய்து வந்தனர். பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அவர்கள் வணிகம் செய்யவில்லை. உற்பத்தி செய்யும் பொருட்கள் கிடைக்காத இடங்களுக்கு வண்டிகளில் ஏற்றிச்சென்று விற்பனை செய்மு தாங்களும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். தங்களது பொருட்களை வாங்குமம் மக்களும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் எனக் கருதினர். பொய் சொல்லி பொருட்களை விற்காமல் வெளிப்படையாக உண்மை விலையை கூறி பண்டங்களை விற்பனை செய்வர். அப்படி விற்பனை செய்கின்ற பொழுது பொருளைக் குறைத்துக் கொடுக்காமலும் அவர்களிடமிருந்து அதற்குரிய விலையை கூட்டி வாங்காமலும் நடுநிலைமையோடு வணிகம் செய்தனர் என்று பட்டினப்பாலை குறிப்பிடுகிறது என்பதை,*

**'நெடு நுகத்துப் பகல் போல**
**நடுவு நின்ற நல் நெஞ்சினோர்**
**வடு அஞ்சி வாய்மொழிந்து,**
**தமவும் பிறவும் ஒப்ப**
**கொள்வதூஉம் மிகை கொடாது**
***கொடுப்பதூஉங் குறைகொடாது" (பட்டினப்பாலை பாடல் வரி : 188 - 193 )***

*என்ற பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

***' அற நெறி பிழையாது ஆற்றின் ஒழுகி" (மதுரைக்காஞ்சி பாடல் வரி - 500)***

*என்று மதுரைக்காஞ்சி அறநெறி தவறாது வணிகம் செய்தவரை குறிப்பிடுகின்றது.*

***உள்நாட்டு வாணிகம் :***

*உள் நாட்டுக்குள்ளேயே நடந்த பண்டமாற்று வணிகம் சிறப்பு பெற்றதாக இருந்தது. எனினும் ஆடைகள் அணிகலன்கள் மற்றும் தானியங்கள் போன்றவற்றிற்கான வணிகம் சிற்றூர்களில் மட்டும் நடைபெற்றது. நகரங்களில அங்காடிகள் செயல்பட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்தது, அவை நாளங்காடி, அல்லங்காடி என்பனவாகும். இதை இரவு பகலாக நடைபெற்று மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்தது. இவற்றைத்தவிர தரைவழி வாணிகம், கடல்வழி வாணிகம் என்ற இரண்டு வகைகளில் வாணிகம் நடைபெற்றதை சிலப்பதிகாரத்தில் காணலாம்.*

*உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை வியாபாரத்திற்கு வண்டிகளில் கொண்டு செல்வதற்கு கழுதைகளும், எருதுகளும் பயன்படுத்தப்பட்டன. எருதுகளை பூட்டிய வண்டியில் உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு உமணர்களின் மனைவி தம் பிள்ளைகளோடு வெளியூர்களுக்கு சென்றனர் என்பதை,*

***' பல் எருத்து உமணர் பதிபோகு நெடுநெறி " ( பெரும்பாணாற்றுப்படை பாடல் வரி : 65)***

***'நோன் பகட்டு உமணர் ஒழுகையோடு வந்த " ( சிறுபாணாற்றுப்படை பாடல் வரி : 55 )***

*என்ற பாடல்வரிகள் மூலம் உமணார்;கள் உப்பு வண்டிகளை இழுத்து சென்று விற்பனை செய்தனர் என்பது புலனாகின்றது.*

*சிறிய, சிறிய சுளைகளைக் கொண்ட பலாப்பழம் போன்ற மிளகு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு செல்ல நேரான காதினையும் உயரமான முதுகினையும் கொண்ட கழுதைகளை பயன்படுத்தினர் என்பதை,*

**'சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்**
**புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்**
**தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கு**
***முல்குடைப் பெருவழிக் கவலை காக்கும் " (பெரும்.பாண்.பாடல் வரி : 78-81)***

*என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும் உள்நாட்;டு வணிகத்தில் பண்டமாற்று முறையே பெரும்பாலும் வழக்கில் இருதுள்ளது. சங்க காலத்து மக்கள் நெல்லின் அளவினை கொண்டே பிற பொருள்களை மதிப்பிட்டனர் என்பதை சங்கப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. பெரிய கடலில் மீன்வேட்டை செய்யும் சிற்றூரில் வாழும் பரதவர் பெரிய*

*உப்பங்கழியாகிய வயலில் விளைவித்த வெண்மையான கல் உப்பினை விலைக்கூவி விற்பதற்கு வெப்பமுடைய குன்றத்தை கடந்து சென்றனர் என்பதை சங்கப் பாடல்களில் காணலாம்.*

***அங்காடிகள் :***

*சங்க காலத்தில் பல்வேறு பொருட்களை விற்பனை செய்யும் அங்காடி வீதிகள் இரவு பகலாக இயங்கி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்தன. அக்கடைவீதிகள் இன்றும் மதுரை புகார் போன்ற நகரங்களில் நிலைத்து நிற்பதை காண முடிகின்றது. அக்காலத்தில் அங்காடி வீதி என்று அழைக்கப்பட்டவை தற்காலத்தில் கடைத்தெரு, கடைவீதி என்று அழைக்கப்படுகின்றன. அங்காடி என்ற சொல்லை முதன்முதலில் சங்க நூல்களான அகநானூறு, மதுரைக்காஞ்சி மற்றும் தமிழ்மொழியின் முதல் காப்பிய நூலான சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் காணலாம். அங்காடி இரண்டு வகைப்படும் என்று மதுரைக்காஞ்சியும் சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றது.*

*1.பகல் நேரம் முழுவதும் விற்பனை நடைபெறும் நாளங்காடி, 2.இரவு நேரங்களில் விற்பனை நடைபெறும் அல்லங்காடி. இவ்விரு அங்காடிகளை கொண்ட பழைய மூதூர் (மதுரை) நகரமானது தூங்கா நகரம் என்ற பெயருடன் விளங்கியது என்பதை மாங்குடி மருதனாரின் திறன் கொண்டு அறிந்து கொள்ளலாம்.*

*'ஆவியாகி கடல்நீர் வற்றி விடுவதில்லை. மழை பொழிந்து ஆறு பெருக்கெடுத்து வந்து கடலில் கலப்பதால் அது பொங்கி விடுவதுமில்லை''. அதனைப் போன்று மதுரை நகரில் உள்ள நாளங்காடி, அல்லங்காடி கடை வீதிகளில் மக்கள் திரளாக வந்து பொருள் வாங்கிச் செல்வதால் பொருட்கள் இல்லை என்று சொல்லுமளவிற்கு தீர்ந்து விடுவதும் இல்லை. அந்த அளவிற்கு விற்பனை செய்வதற்கு பொருட்களை கொண்டு வந்து குவிப்பர். அங்கு வருகின்ற மக்களையும், பொருட்களையும் பாதுகாப்பதற்கு சிவந்த நிறமுடைய உடைகளை அணிந்த படைவீரர்கள் காவலுக்கு நிற்பர் என்பதனை,*

***' மழைகொளக் குறையாது புனல்புக மிகாது***
***கரைபொரு திரங்கு முந்நீர் போலக்***
***கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது***
***மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்***
***நாளங் காடி நனந்தலைக் கம்பல***
***வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்***
***செக்கர் அன்ன சிவந்துணங் குருவிற்***
***கண்பொரு புகூஉம் ஒண்பூங் கலிங்கம் "*** ***(மதுரைக்காஞ்சி பாடல் வரி 424-433)***

*என்ற பாடல்வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். மதுரையின் நால்வேறு வீதிகளிலும் நடந்துகொண்டு விற்போரும், துணிகளை ஓரிடத்தில் அடைத்து வைத்துக்கொண்டு விற்பவர்களும், கடை வைத்து தொழில்புரிபவர், சங்கை அறுத்து வளையல் செய்து விற்பவர், பவளம் போன்ற மணிகளை கோர்த்து விற்பவர், தங்கத்தை உருக்கி பல வகையான அணிகலன்கள் செய்து விற்பவர், பலவகை வண்ணமுடைய ஆடைகளை விற்பவர், செம்பொண்ணால் ஆன பாத்திரங்களை விற்பவர், மகளிர்களின் சட்டையில் மணி முடித்துக் கொடுத்து அழகுபடுத்துப்பவர், ஓவியம் தீட்டுபவர், படிமம் செய்து விற்பவர், மற்றும் பல சிறிய பெரிய துணிகளை விரித்து பொருட்களை வைத்து விற்பனை செய்பவர் என மக்கள் கூட்டம் கடல்போல் அங்கு காணப்படும்.*

*பத்தி, சந்தனம், ஏலம் போன்ற நறுமணப் பொருட்களும், பழங்கள் இனிப்புகளை உடைய மாம்பழங்கள், காய்கள் விற்பனை செய்பவர், வெற்றிலை பாக்கு கலந்து விற்பவர், கிழங்கு வகைகள் விற்பவர், உணவுப்பொருட்களை விற்பவர், இனிமையான திண்பண்டங்களை விற்பவர் என அனைவரும் விற்பனை செய்து கொண்டிருக்க, அங்கு வருகின்ற மக்கள் அதனை வாங்கி ஆங்காங்கே நின்று தின்று கொண்டிருந்தனர். அதன் ஆரவார ஓசை எங்கும் ஒலித்தது என்பதை,*

***'சேறு நாற்றமும் பலவின் சுளையும்***
***வேறுபடக் கவினிய தேமாங் கனியும்***
***பல்வே றுருவிற் காயும் பழனும்***
***கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி***

**மென்பினி யவிழ்ந்த குறுமுறி யடகும்**
**அமர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்**
**புகழ்படப் பண்ணிய பேரூன் சோறும்**
**கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்**
**இன்சோறு தருநர் பல்வயி னுகர "** ***(மதுரைக்காஞ்சி பாடல் வரி : 407 - 415)***

*என்ற பாடல்வரிகள் என்று குறிப்பிடுகின்றது.*

*நாளங்காடி, அல்லங்காடி என இரண்டு வீதிகளும் மக்கள் கூட்டத்தில் ஆரவாரத்துடன் காணப்பட்டன. நாளங்காடி சென்று பொருள் வாங்கி அல்லங்காடி சென்று விற்பனை செய்பவரின் நிலை எப்படி உள்ளது என்றால் கடலிலுள்ள பொருளை கரையில் கொண்டு வந்து விட்டுவிட்டு கரையில் உள்ள பொருட்களை கடலின் உள்ளே இழுத்துச் செல்வதைப் போன்று இருப்பதாக மாங்குடி மருதனார் சுவைபட பதிவு செய்துள்ளார்.*

*மலையில் உற்பத்தி செய்யும் பொருட்களையும், கடல்நீரில் இருந்து பெறப்படும் முத்து, சிப்பி போன்ற விலை உயர்ந்த பொருட்களும், ஆடை ஆபரணங்கள் போன்றவைகளும் அங்கே விற்பனை செய்யப்பட்டன. தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்தல் மற்றொரு இடத்தில் உள்ள பொருட்களை கொண்டு வந்து ஓரிடத்தில் வைத்து விற்பனை செய்தல் என பல வழிகளில் வணிகம் நடைபெற்றதை சங்க பாடல்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம். அங்காடி என்ற சொல்லாட்சி தற்காலத்தில் பெரும்பாலும் வழக்கத்தில் இல்லை என்றாலும் கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் இன்றும் அங்காடி என்ற சொல் வழக்கத்தில் உள்ளது. அச்சொல் கடை என்ற பொருளிலேயே கையாளப்படுகிறது. தமிழகத்தில் கடைவீதி, கடைத்தெரு போன்ற சொற்கள் வழக்கத்தில் உள்ளன. தற்போது பல்பொருள் அங்காடி என்ற கடை ஒன்றினை அமைத்து அனைத்து விதமான பொருட்களையும் விற்பனை செய்து வருகின்றனர்.*

***அயல்நாட்டு வாணிகம் :***

*பண்டைய தமிழர்கள் பல்வேறு நாடுகளுடன் கடல் வாணிகம் கொண்டிருந்தனர். தமிழர்கள் அயல்நாட்டிற்கு சென்று வாணிகம் செய்ததை போன்று அயல் நாட்டினர் தமிழ்நாட்டிற்கு வந்து வாணிகம் செய்தனர். காற்றின் திசை அறிந்து அதன் மூலம் கிரேக்கம், சிங்கப்பூர், அரபு நாடுகளில், மலேசியா போன்ற நாடுகளுடன் வாணிகம் கொண்டிருந்தனர்.*

' **மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம் பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்**
**முட்டாச் சிறப்பிற்ப பட்டினம் பெறினும்"** ***(பட்டினப்பாலை பாடல் வரி : 216 -218)***

*என்ற பாடல்வரிகள் பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் வணிகத்தில் உலகளவில் புகழ் பெற்று விளங்கியது என்பதை தெளிவுபடுத்துகின்றது. அங்குள்ள துறைமுகத்தில் அயல்நாடுகளிலிருந்து கப்பலேறி வந்து வேற்றுமொழி பேசியவர்கள் தங்கி வணிகம் செய்ததையும் அறிந்து கொள்ளலாம்.*

*சேர நாட்டின் தலைநகர் முசிறியில் அரேபியர்கள் வந்து தங்கி வணிகம் செய்தனர். அவர்கள் வணிகம் செய்த பகுதி பந்தர் என்று அழைக்கப்பட்டதை,*

'**நன்கல வெறுக்கைத் துஞ்சும் பந்தர் "** ***(பதிற்று - 6ஆம் பத்து ப.200)***
'**பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர் "** ***(பதிற்று - 7ஆம் பத்து ப.200)***
'**பந்தர்ப் பயந்த பல்புகழ் முத்தம் "** ***(பதிற்று - 8ஆம் பத்து ப.200)***

*என்ற பதிற்றுப்பத்து பாடல்வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

***ஏற்றுமதியும், இறக்குமதியும் :***

*சங்கத்காலத் தமிழர்கள் பல்வேறு நாடுகளுக்கு தாங்கள் விளைவித்த உணவுப் பொருட்கள், மருந்து பொருட்கள், விலை உயர்ந்த மரங்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்தனர். இலவங்கம், மிளகு, இஞ்சி, ஏலம், அரிசி போன்ற உணவு பொருட்களையும் தேக்கு, கருங்காலி, சந்தனம் போன்ற விலை உயர்ந்த மர வகைகளையும் ஏற்றுமதி செய்தனர். தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகும், இஞ்சியும் மருந்துகள் தயாரிக்கப் பயன்பட்டன புகழ்பெற்ற கிரேக்க மருத்துவர் ஹிப்போகிரேட்டஸ் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இந்திய மருத்துவ முறைகளையும் மருந்துப் பொருட்களையும் பயன்படுத்தி வந்தார். அவர் தமிழகத்தின் மிளகை இந்திய மருந்து பொருள் என்றே குறிப்பிடுகின்றனர். அதுமட்டுமின்றி நல்லெண்ணெயின் பயனை கிரேக்கர்கள் கி.மு. ஐந்தாம்*

*நூற்றாண்டிலேயே நன்கு அறிந்திருந்தனர். தமிழ்நாட்டில் விளைந்த கருங்காலி மரங்கள் ரோமாபுரியில் பெருமளவில் விற்பனையாகின. பாரசீக துறைமுகங்களில் தமிழகத்தில் விலையுயர்ந்த தேக்கு மரங்களைக் கொண்டு கப்பல்கள் செய்தனர்.45 (தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் பக்கம் - 59 - 60 டாக்டர் கே.கே.பிள்ளை).*

*சங்க காலத்தில் யவனர்கள் பெரிய மரக்கலத்தில் குதிரைகளை இறக்குமதி செய்து அதற்கு ஈடாக தமிழகத்தில் உற்பத்தி செய்த தமிழகத்தின் அணிகலன்களை ஏற்றுமதி செய்தனர். இவ்வாறு பண்டமாற்றுமுறை நாள்தோறும் நடைபெற்றது என்பதனை,*

**'விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்**
**நனந்தலை தேஎத்து நன்கலன் உய்ம்மார்**
**புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்**
**வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப " *(மதுரைக்காஞ்சி பாடல் வரி : 321-324)***

*என்ற பாடல்வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.*
*மேலும் கிரேக்கர்கள் சேர நாட்டின் பேரியாற்றின் வழியாக மரக்கலத்தினில் பொன்னை கொண்டு வந்து கொடுத்துவிட்டு மிளகிளை வாங்கி சென்றனர் என்பதை,*

**'கள்ளிஅம் பேரியாற்று வெண் நுரை கலங்க**
**யவனர் தந்த வினை மாண் நன் கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும் " *(அகநானூற்று பாடல் 149: 8-10)***

*என்ற அகநானூற்று பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

*தமிழர் மேலை நாடுகளிலிருந்து தேயிலை பொன் போன்றவற்றை இறக்குமதி செய்தனர் என்பதோடு அல்லாமல் கீழை நாடுகளான சீனம், மலேசியா, ஜாவா என்று சொல்லக்கூடிய இந்தோனேஷியா, வட போர்னியா ஆகிய நாடுகளுடன் மிக வளமான ஒரு வாணிபம் நடத்தி வந்துள்ளனர். தமிழர்கள் சீனத்துடன் மேற்கொண்டிருந்த வணிக தொடர்பானது மிகவும் பழமையானது. இத்தொடர்பு கி.மு.1000 ஆண்டு அளவிலேயே தொடங்கிவிட்டது எனத் தெரியவருகிறது. தமிழகத்து பண்டங்கள் கி.மு. ஏழாம் நூற்றாண்டிலேயே சீனத்தில் இறக்குமதி ஆயினவென்று அந்நாட்டு வரலாறுகள் அறிவிக்கின்றன. சீனத்து பண்டங்களையும் தமிழகம் ஏற்றுக்கொண்டது. இதனால் இன்றளவும் பட்டுக்கு சீனப்பட்டு என்றும் சக்கரைக்கு சீனி என்றும் பெயர் வழங்கி வருகின்றது. சீன கண்ணாடி, சீன கற்பூரம், சீன கருவா, சீனக் களிமண், சீனக்காலம், சீனக்கிழங்கு, சீனகுடை, சீனத் சட்டி, சீன சரக்கு, சீன கற்கண்டு, சீன சுருள் என்ற சொற்கள் இன்றளவும் தமிழுடன் இணைந்து வருகின்றது. இவற்றுள் இன்ன பிற சொற்களும் அடக்கம் என்கிறார்* **டாக்டர் கே.கே. *(பிள்ளை. டாக்டர் கே.கே.பிள்ளை தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் பக்கம் -60, ப.202)***

*கிரேக்க நாட்டிலிருந்து கலனேற்றி வந்த மதுவினை இளமகளிர் மன்னனுக்கு பொன் கலங்களில் ஏந்தி வார்த்து ஊற்றினர் என்ற புறநானூற்று பாடல் வரிகளை காண்கின்ற பொழுது பொருட்களை மட்டும் அல்லாமல் மதுவினையும் இறக்குமதி செய்தனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.*

**'யவனர் நன் கலம் தந்த தண் கமழ் தேறல்**
**பொன் செய் புனை கலத்து ஏந்த, நாளும்**
**ஒண் தொடி மகளிர் மடுப்ப " *(புறநானூற்று பாடல் 56: 3-5)***

*பட்டினப்பாலை உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு இறக்குமதிகளை பற்றிய செய்திகளை பதிவு செய்துள்ளது. அதில் சோழநாட்டு துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினத்திற்கு மேல் நாடுகளில் இருந்து குதிரைகள் வந்தன. சேர நாட்டிலிருந்து மிளகு, சந்தனம், அகில் போன்ற விலையுயர்ந்த நறுமண பொருட்கள் வந்தன. வடநாட்டிலிருந்து முத்து, சங்கு போன்ற பொருட்கள் வந்திறங்கின. கிழக்கு கடற்கரையில் இருந்து பவளம் வந்தது. கங்கைக்கரையில் இருந்து பலவகையான உணவுப்பொருட்கள் வந்திறங்கின. ஈழ நாட்டிலிருந்து உணவுப் பொருட்களும், கடாரம் என்று சொல்லக்கூடிய தற்போதைய மலேசியாவிலிருந்து பலவகையான பொருட்கள் வந்து இறங்கின. இவை அனைத்தும் சோழ நாட்டு துறைமுகமான காவிரிப்பூம்பட்டினத்தின்; வணிகர் வீதிகளில் சோழ நாட்டு முத்திரையுடன் விற்பனை செய்யப்பட்டன என்பதை,*

**'நீரின் வந்த நிமிர் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்**

***கங்கை வாரியும், காவிரிப் பயனும்***
***ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்***
***அரியவும் பெரியவும் நெரிய ஈண்ட " (பட்டினப்பாலை பாடல் வரி : 185-192)***

*என்ற பட்டினப்பாலை பாடல்வரிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.*

*பத்துப்பாட்டு நூல்களுள் மிக நீண்ட அடிகளை உடைய மதுரைக்காஞ்சி பாடல் வரிகளுக்கு உரைகூறும் நர்ச்சினார்க்கினியர் தொழில்களில் மேலோங்கி விளங்குவது உழவும், வாணிகமும் என்று கூறுகின்றார். அதன் வழி அகன்ற பொருந்துதலை உடைய சிறிய செல்வத்தால் புகழ் நிறைந்த குடிமக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு நிலங்களிலும் வாழ்ந்தனர் என்று கூறுவதால் இவ்விரண்டு தொழில்களும் நான்கு நிலங்களிலும் சிறப்பாக நடைபெற்றன என்பதை*

***'வியல் மேவல் விழுச் செல்வத்து***
***இரு வகையான் இசை சான்ற,***
***சிறுகுடிப் பெருந் தொழுவர்***
***குடி கெழீஇய நால் நிலவரொடு " (மதுரைக்காஞ்சி 120-124)***

*என்ற பாடல் வரிகளின் வாயிலாக தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.*

*இவ்வாறாக தமிழர்கள் மேலை நாடுகளுடனும், கீழே நாடுகளுடனும் சிறப்பான வாணிக தொடர்பை கடல் கடந்தும் மேற்கொண்டிருந்தனர் என்பது உலக அளவில் சிறப்புற்றிருந்ததை சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன.*

***முடிவுரை :***

*தமிழரின் வாழ்வினை உயர்த்துவதற்குரிய கருவிகளுள் ஒன்றாக வாணிகம் இருந்துள்ளது. இத்தகைய வாணிகம் பகல், இரவு என்று இருபொழுதும் நடைபெற்றுள்ளது. வணிகம் செய்வதற்கென்று தனி இடங்கள் அமைக்கப்பட்டன அங்கு வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கி.மு. 1000 ஆண்டளவில் தமிழகம் சீனம், மலேசியா, ஜாவா, இந்தோனேஷியா, சிங்கப்பூர், அரபு நாடுகள், கிரேக்கம் போன்ற நாடுகளோடு கடல் வழி வாணிபம் கொண்டிருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது. வெளிநாட்டில் இருந்து பட்டு, சீனி, கண்ணாடி, கற்பூரம், குதிரை போன்றவை இறக்குமதி செய்யப்பட்டு அதற்கு பதிலாக தமிழகத்தில் விளைவிக்கப்பட்ட மிளகு, இஞ்சி, ஏலம், இலவங்கம், அரிசி போன்ற உணவுப் பொருட்களும் தேக்கு, கருங்காலி, போன்ற விலை உயர்ந்த மரங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. பழங்காலத்தில் சோழர்களின் தலைநகரமான காவிரி பூப்பட்டினம் மற்றும் சேரர்களின் தலைநகரமான முசிறி ஆகிய பகுதிகள் வணிகத்தில் உலக அளவில் சிறப்புற்று இருந்ததையும், இந்த வாணிகத்தை மேற்கொள்கின்ற பொழுது தமிழர்கள் நடுநிலைமையோடு இருந்துள்ளனர் என்பதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.*

***பார்வை நூல்கள் :***

1. *புலியூர்க்கேசிகன் அகநானூறு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை 14. ஜூன் – 2010*
2. *புலியூர்க்கேசிகன் புறநானூறு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை 14.*
3. *தொல்காப்பியம் பொருளதிகாரம் (முழுமையும்) புலியூர்க்கேசிகன் உரை பாரி நிலையம் பிராட்வே சென்னை 108. பதிப்பு 2017*
4. *திருக்குறள் புதிய உரை புலியூர் கேசிகன் பூம்புகார் பதிப்பகம், 127 பிரகாசம் சாலை பிராட்வே சென்னை 108 பதிப்பு பிப்ரவரி 2010.*
5. *முனைவர் வி நாகராஜன் பத்துப்பாட்டு மூலமும் உரையும் தொகுதி 1,2 நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 41B சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை – 98. முதல் பதிப்பு ஏப்ரல் – 2004.*
6. *பத்துப்பாட்டு ஆராய்ச்சி மா. இராசமாணிக்கனர் அவ்வைகாட்சிக் கூடம் 96 பி.வி.கோயில் தெரு சென்னை - 13.*
7. *டாக்டர் கே.கே. (பிள்ளை. டாக்டர் கே.கே.பிள்ளை தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்*